**முப்பதெட்டு ஆண்டு கால வியாதியஸ்தன் சுகமடைதல்**

**வாசிக்க**: **யோவான்** 5:1-15

எருசலேமில் பெதஸ்தா என்னும் ஒரு குளம் இருந்தது. அந்தக் குளத்தின் கரையில் வியாதியுள்ளவர்கள் அநேகர் இருந்தார்கள். ஏனென்றால் சில நேரங்களில் தேவதூதன் வந்து அந்தக்குளத்தில் இறங்கி தண்ணீரைக் கலக்குவான். தண்ணீர் கலங்கினபின்பு யார் முதலில் கலக்கப்பட்ட அந்தத் தண்ணீரில் இறங்குவார்களோ அவர்களுக்கு எந்த கொடூரமான நோய் இருந்தாலும் சுகமடைவார்கள்.

ஒரு முறை பெதஸ்தா குளத்திற்கு இயேசு கிறிஸ்து வந்தார். அந்தக் குளத்தின் ஓரத்தில் முப்பெத்தெட்டு ஆண்டுகள் வியாதியாய் இருந்த ஒரு மனிதன் இருந்தான். அவன் அநேக ஆண்டுகளாய் வியாதியாய் இருக்கிறதை இயேசு அறிந்தார். அவன் படுத்திருந்தப் படுக்கைக்கு அருகில் இயேசு வந்து நின்று அவனைப் பார்த்து "நீ சுகமடைய விரும்புகிறாயா?" என்று கேட்டார். இந்த கேள்வியை இயேசு ஏன் கேட்டார்? அவன் விரும்புகிறானா? என்பதை அவன் வாயால் சொல்ல வேண்டும் என்று எதிர்பார்த்தார். அதற்கு அவன் ஆண்டவரே தண்ணீர் கலக்கப்படும்போது என்னைக் குளத்தில் கொண்டுபோய் விடுவதற்கு ஒருவரும் இல்லை. நான் போகிறதற்கு முன்னே வேறொருவன் எனக்கு முந்தி இறங்கி விடுகிறான்". என்று கூறினான்.

இயேசு கிறிஸ்து அவனிடம் "எழுந்திரு உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நட" என்றார். உடனே அந்த நொடியே அவன் தன் படுக்கையை எடுத்துக்கொண்டு நடந்துபோனான். பின்பு அவனை தேவாலயத்தில் இயேசு கண்டார். இயேசு கிறிஸ்து அவனிடம் நீ சொஸ்தமானாய் "அதிக கேடானதொன்றும் உனக்கு வராதபடி இனி பாவம் செய்யாதே" என்று கூறினார். இயேசு தன்னை குணமாக்கினார் என்று அவன் யூதர்களுக்கு அறிவித்தான்.

முப்பத்தெட்டு ஆண்டுகள் நடக்க முடியாமல் இருந்த அவனுக்கு இயேசு மிக எளிதில் சுகம் கொடுத்தார். அவன் இயேசுவை தேடிப்போகவில்லை. இயேசுவே அவனைத் தேடிவந்தார். அவனை விசாரித்து சுகப்படுத்தினார். பல ஆண்டு நோயாளியாக இருந்தாலும் இயேசு கிறிஸ்து உடனே சுகம் தருவார். எத்தனை பழமையான பிரச்சனைகளையும் சரி செய்ய இயேசு கிறிஸ்துவால் முடியும். இயேசு நீ விரும்பினால் உன்னுடைய வாழ்வில் அற்புதம் செய்வார்.

**கேள்விகள்**:

1. பெதஸ்தா குளத்தின் ஓரத்தில் எத்தனை வருடம் வியாதியாய் இருந்த மனிதன் இருந்தான்?

2. இயேசு கிறிஸ்து அந்த மனிதனிடம் என்ன கேட்டார்?

3. இயேசு கிறிஸ்து அந்த மனிதனுக்கு என்ன செய்தார்?